**சுருக்கம்**

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை – வேலைவாய்ப்புப் பிரிவு – மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலகம் வாயிலாக அனுப்பப்படும் பரிந்துரை பட்டியல்கள் – பட்டியலின் செல்லுபடி காலத்தை உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி2) துறை**

அரசாணை (நிலை) எண். 30

நாள் : 16.02.2021
சார்வரி, மாசி–4,
திருவள்ளுவர் ஆண்டு –2052

**படிக்கப்பட்டது :-**

1. அரசாணை (நிலை) எண்.177, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 31.07.1985.
2. அரசாணை (நிலை) எண்.44, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 11.03.2015.

**மேலும் படிக்க:-**

3. இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித எண். ப.ப.1/13082/2020, நாள்:11.11.2020.

---

**ஆணை:–**

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட ஆணையில், சம்பந்தப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும் பரிந்துரைப் பட்டியலின் செல்லுபடி காலமானது பட்டியல் அனுப்பப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலம் என நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் கடிதத்தில், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலகங்களைப் பொறுத்தவரை மாநில அரசு பணிக்காலியிடங்களில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC), தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு குழுமம் (TNUSRB) மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB) போன்ற தேர்வு வாரியங்களின் வரம்பிற்கு உட்படாத பணிக்காலியிடங்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நடைமுறை விதிகளுக்கு உட்பட்டு, தற்காலிக மற்றும் நிரந்தர பணிக்காலியிடங்களுக்கு 1:5 என்ற விகிதத்தில் பரிந்துரை பட்டியல் வேலையளிப்போருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது எனவும், மத்திய அரசு சார்ந்த நிறுவனங்கள், மாநில அரசு சார்ந்த நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் அனைத்து வித பணிக்காலியிடங்களுக்கும் பரிந்துரை பட்டியல், மேற்படி விகிதத்தில் அனுப்பி வைக்கப்படுகிறது எனவும், மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட ஆணையின்படி, பரிந்துரைப் பட்டியல்களின் செல்லுபடி காலம், அனுப்பி வைக்கப்படும் தேதியிலிருந்து ஆறு மாதம் என்றும், சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட ஆணையின்படி, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் நிரப்பப்படும் பணிக்காலியிடங்களுக்கு, வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம்

(த.பி.பா.)

பெறப்படும் பரிந்துரை பட்டியல்களுடன், வட்டார மொழியில், குறைந்தபட்சம் இரண்டு தினசரிகளில் பணிக்காலியிடம் குறித்து விளம்பரப்படுத்தி, அதனடிப்படையில் பெறப்படும் விண்ணப்பங்களையும் இணைத்து வேலையளிப்போர் பரிசீலனை செய்து பணி நியமனம் செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு பணிக்காலியிடங்கள் குறித்து தினசரிகளில் விளம்பரப்படுத்தப்படும் பொழுது, பணிக்காலியிடம் அறிவிக்கப்பட்ட மாவட்டம் (Place of Work) மட்டுமல்லாது, மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் அதிக அளவில் வேலையளிப்போருக்கு விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன எனவும், பணிக்காலியிடங்கள் தொடர்பில் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்படுவதன் வாயிலாக அதிக அளவில் நேரடியாக விண்ணப்பங்கள் பெறப்படுவதால் அனைத்தையும் பரிசீலித்து தேர்வு செய்வதில் வேலையளிப்பவர்களுக்கு கால அவகாசம் அதிகமாக தேவைப்படுகிறது என்பதால், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலகத்தால் பரிந்துரைக்கப்படும் பட்டியலின் செல்லுபடி காலம் ஆறு மாதம் என்று இருப்பதை ஓராண்டு காலமாக உயர்த்தி ஆணை வழங்குமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலகத்தால் பரிந்துரைக்கப்படும் பரிந்துரை பட்டியலின் செல்லுபடி காலம் ஆறு மாதம் என்று இருப்பதை அனைத்து நேர்வுகளுக்கும் ஓராண்டு காலமாக உயர்த்தி ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

முகமது நசிமுத்தின்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, கிண்டி, சென்னை–600 032.

**நகல்**
அனைத்து துறைகள், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
அனைத்து பிரிவுகள், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.
சுத்த நகல் கோப்பிற்கு (கோப்பு எண்.18608/ட்டி2/2020).

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.